# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,133 — 1960 මැයි 20 වැනි සිකුරාදා — 20.5.1960

12,133 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மே மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 113 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 114 |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் | — |
| ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும் | — |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| ஏல விற்பனைகள் | — |
| நாணுவிதம் | — |


## பதவிகள்—வெற்றிடம்

### பொலிஸ் பகுதி

#### பொலிஸ் கொஸ்தாப்பு ஸ்தானங்கள்

கீழ்க்காணும் யோக்கியதாம்சங்களுடையவர்களிடமிருந்து, பொலிஸ் சேவையில் கொஸ்தாப்பு ஸ்தானங்களுக்கு மனுக்கள் கோரப்படுகின்றன.

2. **மனுக்கள் :** பயிற்சி அதிபர், பொலிஸ் பயிற்சி கலாசாலை, களுத்துறை, என்ற விலாசத்திற்கு அவரிடமிருந்து பெறக்கூடிய பத்திரத்தில், 30.7.60 ம் திகதிக்குள் அனுப்பப்பட வேண்டும்.

3. **வேதனம் :**

தகுதிகாண் சேவைக்காலத்தில் முதல் வருடம் வருடமொன்றுக்கு ரூ. 750 ;

இரண்டாம் வருடம் வருடமொன்றுக்கு ரூ. 840 ;

மூன்றும் வருடம் வருடமொன்றுக்கு ரூ. 882 ;

நியமனம் உறுதிப்படுத்தப்பட்டதும் வருடமொன்றுக்கு ரூ. 924 ல் இருந்து (ரூபா 42 வீதம் 20 வருடாந்த உயர்வுகளுடன் ) ரூபா 1,764 வரை உயரும்.

ரூ. 1,050 ரூ. 1,260 ரூ. 1,638 வருடாந்த வேதனத்தை அடைய முன்பு கடப்புப் படிகள் உண்டு.

4. **நியமன நியதிகள் :**

(அ) இந்நியமனங்கள் நிரந்தரமானதும் இளைப்பாற்றிச் சம்பளமுடையவையுமாகும். விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்கும், பொலிஸ் இதர நிதிகளுக்கும் கட்டுப்பணங்கள் செலுத்தப்பட வேண்டும் ;

(ஆ) இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசெற்) 1 ம் பாகம் 2 ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருக்கும் பொதுச்சேவை ஸ்தானங்கள் நியமனத்திற்கு உரிய நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

(அ) தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மூன்று வருடங்களுக்கு தகுதி காண சேவையில் நியமிக்கப்படுவர். அதன் இறுதி கட்டத்தில், சேவையில் உறுதிப்படுத்தற்கு தகுதி வாய்ந்தவரா எனத் தீர்மானிக்கப்படும் ;

(ஆ) தங்கள் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படும்வரை விவாகஞ் செய்ய அனுமதி அளிக்கப்பட மாட்டார்கள் ;

(இ) தகுதிகாண் சேவைக் காலத்தில் ஓர் தமிழ் அல்லது சிங்களம் (தாய்மொழி அல்லாத) வாய்மொழி தேர்ச்சியில் சித்தியடைவதோடு அரசாங்கத்தால் நடத்தப்படும் சிங்கள திறமைப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை அனுசரணையிற் கொண்டுவருவதற்கு இது சம்பந்தமாக ஏற்கனவே செய்யப்பட்டுள்ள, இனிமேற் செய்யப்படக் கூடிய சகல விதிகளுக்கும் இணங்கியொழுகுமாறு யாவரும் வேண்டப்படுவர்.

6. **தேவைப்படும் யோக்கியதாம்சங்கள் :**

(அ) **வயது.**—18 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) **கல்வித்தராதரம்.**—கல்வி அதிபரினால் அங்கீகரிக்கப்பெற்ற பாடசாலை யொன்றிலிருந்து ஜேஸ்ட தராதரப் பத்திரத்தைப் பெற்றவராகவோ அல்லது அப்பேர்ப்பட்ட பாடசாலையில் எட்டாம் வகுப்பில் தேர்ச்சியடைந்தவரென்றும் அவ்வகுப்பு ஜேஸ்ட தராதரப் பத்திரத்துக்கு சமமான தென்றும், அப்பாடசாலையின் தலைவரிடமிருந்து நற்சாட்சிப் பத்திரம் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும் ;

(இ) **உடற் தகுதி.**— உயரம் 5 அடி 4 அங்குலம். மார்பு 34 அங்குலம் (இயல்பான சுவாசம் வெளியிட்ட நிலை) கண்பார்வை இயல்பான நிறப்பார்வை இருத்தல் வேண்டும். வழமையாக கண்ணாடி பாவித்தல் தவிர்க்கப்பட்டுள்ளது ;

(ஈ) **இதர யோக்கியதாம்சங்கள்.**—விண்ணப்பதாரிகள் விவாகமாகாதவர்களாயிருத்தல் வேண்டும். (மாஜி இராணுவத்தினரும் இலங்கை பிரிட்டிஷ் கடற்படையிலிருந்து விலக்கப்பட்டவர்களும் இதினின்றும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்) விண்ணப்பதாரிகள் அனைவரும் இலங்கையராக இருத்தல் வேண்டும்.

(உ) வைத்திய பரிசோதனையில் தகுதி உடையவராகக் காணப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அனைவரும் 1948 ம் வருஷத்தில் அமுலுக்கு வந்த இலங்கை பிரஜா உரிமைச் சட்டம் நிர். 18 ன் படி இலங்கையராக இருத்தல் வேண்டும்.

எம். டபிள்யு. எப். அபயக்கோன்,
பொலிஸ் பிரதம அதிகாரி.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1,
1960 ம் ஆண்டு மே மீ 9 ந் உ.

---

### பொலிஸ் பகுதி

#### பொலிஸ் சாரதி ஸ்தானங்கள்

பொலிஸ் பகுதியில் சாரதி ஸ்தானங்களுக்கு மனுக்கள் கோரப்படுகின்றன.

களுத்துறையில் உள்ள பொலிஸ் பயிற்சி கலாசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய மனுப்பத்திரங்களில் மனுச்செய்தல் வேண்டும். மனுக்கள் 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 13 ந் திகதிக்கு முன்பாக பதிவுசெய்யப்பட்ட (ரிஜிஸ்டர்) தபால் மூலம் பொலிஸ் பயிற்சி கலாசாலை அதிபர், களுத்துறை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. **வேதனம்.**—சேர்ந்தவுடன் வருடமொன்றுக்கு ரூ. 750/– ஒரு வருட சேவையின்பின் ரூ. 840/– பின் வருடாவருடம் ரூபா 42/– விகிதம் 22 வருடாந்த உயர்வுகளுடன் ரூ. 1764/– வரை உயரும்.

ரூ. 1,050/–, ரூ. 1,260/–, ரூ. 1,470/–, ரூ. 1,638/– வேதனத்தை அடையமுன் கடப்புப் படிகள் உண்டு.

3. **வேண்டப்படும் தராதரங்கள்.**—விண்ணப்பதாரிகள் யாவரும் பின் வருவனவற்றிற்கு தகுந்த சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) இலங்கைப் பிரஜை ;

(ஆ) 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 13 ந் திகதியன்று வயது 18 க்குக் குறையாமலும் முப்பதுக்குக் கூடாமலும் இருக்க வேண்டும் ;

(இ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் இம்மூன்று பாஷைகளில் ஒன்றை வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் தகுதியுடையவரா என்பதற்கு சான்று ;

(ஈ) சாரதி வேலே செய்வதற்கு தகுதியுடையவரா என்பதற்கு நற் சாட்சிப் பத்திரம் ;

மாஜி இராணுவத்தினருக்கும், இலங்கை பிரிட்டிஷ் கடற்படையி லிருந்து விலக்கப்பட்டவர்களுக்கும் வயதுக் கட்டுப்பாட்டில் சலுகைகள் காண்பிக்கப்படும்.

**குறிப்பு.**—மோட்டார் பொறி நுட்பத்தில் அறிவுள்ளவர்களுக்கும் எல்லா வித மோட்டார் வாகனங்களையும் இயக்கத் தகுதியுடையவர் என்று தராதரப்பத்திரம் பெற்றவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

4. **இதர யோக்கியதாம்சங்கள்.**—விண்ணப்பதாரிகள் விவாகமாகாதவர் களாயிருத்தல் வேண்டும். மாஜி இராணுவத்தினரும் இலங்கை பிரிட்டிஷ் கடற்படையிலிருந்து விலக்கப்பட்டவர்களும் ஏற்கனவே விவாக மானவர்களாயிருத்தலில் பாதகமில்லை.

5. **சௌக்கியம்.**—நியமனத்திற்கு முன்பு எல்லா விண்ணப்பதாரி களும் வைத்தியப்பரிசோதனையில் தகுதியுடையவர்களாகக் காண்படல் வேண்டும். இலங்கையில் எப்பகுதியிலும் சேவை செய்வதற்கு தகுதி யுடையவரென்று தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் எந்த ஓர் நபராவது அங்கவீனத்தாலோ அல்லது வேறு சரீரக்குறைகளாலோ பாதிக்கப் பட்டவராயிருந்தால், அக்குறைகள் அவருடைய நாளாந்த சாரதி வேலையை திறமாக செய்தற்கு தடையாக இருக்கும் என்ற காரணத்தால் அவர் சேவையில் நியமனஞ் செய்துகொள்ளப்படார்.

6. **பயிற்சிக் காலம்.**—பொலிஸ் சாரதியின் பயிற்சிக்காலம் 5 வார மாகும். இப்பயிற்சியின் இறுதியில் பின்வருவனவற்றில் தேர்ச்சியடைய வேண்டும் :

(அ) ஓட்டுதல் (ஆ) பொது வீதி விதிகள் (இ) மோட்டார் பொறி நுட்பம்—பயிற்சி முறை போதனு முறை.

7. **நியமன நியதிகள்.**—இந் நியமனங்கள் நிரந்தரமானதும் இளைப் பாற்றிச் சம்பளமுடையவையுமாகும். விதவைகள் அனுதைகள் இளைப் பாற்றிச் சம்பள நிதிக்கும் பொலிஸ் இதர நிதிகளுக்கும் கட்டுப் பணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

8. **சேவை நிபந்தனைகள்.**—(அ) தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு விண் ணப்பதாரியும் மூன்று வருடங்களுக்கு தகுதி காண் சேவையில் நியமிக்கப்படுவர் ;

(ஆ) தங்கள் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படும்வரை விவாகஞ் செய்ய அனுமதி அளிக்கப்படமாட்டார்கள் ;

(இ) பொலிஸ் ஒழுக்க விதிகளுக்கும், பொலிஸ் பகுதியின் இதர கட்டுப்பாடுகளுக்கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

9. விண்ணப்பதாரிகள் தங்கள் மனுக்களுடன் பின்வருவனவற்றின் நகல்களை இணைக்கவேண்டும் :—

(அ) பிறப்புப் பத்திரம் ;

(ஆ) இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் ;

(இ) சாரதிவேலை செய்வதற்கு தகுதியுடையவரென்று பெற்ற தராதரப் பத்திரம்.

10. இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசெற்) 1 ம் பாகம் 2 ம் பிரிவின் தொடக்கத்தில் பிரசுரித்திருக்கும் பொதுச் சேவை ஸ்தானங்கள் நியமனத்திற்கு உரிய நிபந்தனைகளைப் பார்க்கவும்.

11. தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு கீழ்க்காணும் வசதிகள் கொடுக் கப்படும் :—

(அ) இலவச விடுதி ;

(ஆ) இலவச உத்தியோக உடை ;

(இ) பெட்டி, படுக்கை, சப்பாத்து அவைகளைச் சுத்தஞ் செய்யும் உபகரணங்கள் முதலியன.

12. ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களின் மனுக்கள் அவர் தம் பகுதியின் அதிபர் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

எம். டபிள்யூ. எப். அபயக்கோன்,
பொலிஸ் பிரதம அதிபதி.

பொலிஸ் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 1.
1960ம் ஆண்டு மே மீ 16 ந உ.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

வட பகுதி வவுனியா பெரும்பாக நீர்ப்பாசன இஞ்ஜினியரால் கீழ்க்காணும் வேலைக்காகிய விண்ணப்பப் பத்திரங்கள் இவ்வருடத்திய ஜூன் மாதம் 7 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிவரையும் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 20,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும் :—

| வேலையின் பெயர் | கேள்விப்பத்திரத்திற்குரிய கட்டுப்பணம் ரூபா | இலாகாவினுல் இனுமாகக் கொடுக்கப்படும் வேலைக் காகிய பொருட்கள் |
|---|---|---|
| சமலங்குளத்தில் றெகுலேற்றர் கட்டுதல் .. | 25 | .. சீமந்துமட்டும் |

2. விண்ணப்பப்பத்திரங்கள் இவ்வருஷ ஜூன் மாதம் 6 ம் திகதி வரையும் வவுனியாப் பகுதி நீர்ப்பாசன இஞ்ஜினியரின் காரியாலயத்தி லிருந்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் ஏனைய விபரங்கட்கு காரியாலயத்திற்கு நேர்முகமாக வந்தோ அல்லது மனுச் செய்தோ கோரவும்.

3. தற்சமயம் அரசாங்க ஒப்பந்தங்கள் கைவசமிருப்பின், சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து இவ்வேலைகள் திருப்திகரமாகச் செய்யப்படுகிறதென்றும் அத்தாட்சிப்பத்திரம் ஒன்று சமர்ப்பிப்பதுடனே, வேறெவ்வித வேலையுங் கைவசமில்லையென்றும் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

வ. பாலசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன இஞ்ஜினியர், வவுனியாப் பகுதி.

1960 ம் ஆண்டு மே மீ 7 ந உ.

---

## நீர்ப்பாசன இலாகா

மொனருகலை உப-பகுதியில் உள்ள கம்பெகமுவத் திட்டத்தில் தொழி லாளர் இரட்டைக் குடிசை கட்டுவதற்குரிய கேள்விப்பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 15 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிவரை பண்டாரவளை ஊவாப் பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் மொனருகலை உப-கந்தோரில் பெற்றுக் கொள்ள லாம். அங்கு பிளான்கள் பார்ப்பதற்கும் வேறு எல்லா விபரங்களும் அறிவதற்கும் வசதி அளிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் சீல் செய்து இரு பிரதிகளில் அனுப்பப்படவேண்டும்.

ஒரு கச்சேரியில் அல்லது மொனருகலை உப-கந்தோரில் ரூபா 25 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 14.6.60 வரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் நீர்ப் பாசன இலாகாவில் ரூபா 14,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்தோராக இருக்கவேண்டும். கையிருப்பு வேலைகள் இருப்பின் அவ்வேலைகளைப்பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களோடு மனுச்செய்ய வேண்டும்.

ஓ. என். சந்திரரத்ன,
நீர்ப்பாசன பொறியியலாளர், உபகந்தோர்,
மொனருகலை.

மொனருகலை,
1960 ம் ஆண்டு மே மீ 6 ந உ.

---

## நீர்ப்பாசன இலாகா

மொனருகலை உப-பகுதியில் உள்ள உதகணுவையில் தொழிலாளர் இரட்டைக் குடிசை நிர். 2 கட்டுவதற்குரிய கேள்விப்பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 15 ம் திகதி, புதன்கிழமை, காலை 10 மணிவரை பண்டாரவளையிலுள்ள ஊவாப் பகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன பொறி யியலாளர் ஏற்றுக்கொள்வார்.

கேள்விப் பத்திரங்கள் மொனருகலே உப-கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம். அங்கு பிளான்கள் பார்ப்பதற்கும் வேறு எல்லா விபரங்கள் அறிவதற்கும் வசதி அளிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் சீல் செய்து இரு பிரதிகளில் அனுப்பப்படவேண்டும்.

ஒரு கச்சேரியில் அல்லது மொனருகலே உப கந்தோரில் ரூபா 25 கட்டுப்பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 14.6.60 வரைக்கும் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 10,500 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்தோராக இருக்க வேண்டும். கையிருப்பு வேலைகள் இருப்பின், அவ்வேலைகளைப் பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களோடு மனுச் செய்யவேண்டும்.

ஒ. என். சந்திரரத்தின,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
உப கந்தோர், மொனருகலே.

மொனருகலே.
1960 ம் ஆம் மே மீ 4 ந உ.

## உணவுப் பகுதி

### மாசிக் கருவாடுத்துண்டுகள் விற்பனைசெய்தல்

கொழும்பு மக்கலம் வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் உணவுப்பொருள் விற்பனைப் பகுதியிலிருந்து ஏறக்குறைய 364 மூடைகள் மாசிக்கருவாடுத்துண்டுகள் கொள்வனவு செய்வதற்கான கோரிக்கை 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட கொள்வனவுக்காரர்கள் கோரிக்கை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து 3 நாட்களுக்குள் முழுத்தொகையின் பெறுமதியில் 10 வீதத்தைக் கட்டுப்பணமாகக் கட்டவேண்டும். அதன்பின் கோரிக்கை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து 2 வாரங்கட்குள் முழுத்தொகையையும் கொடுத்து பொருளை எடுத்துச்செல்ல வேண்டும்.

கோரப்பட்ட விகிதத்திலிருந்து கூடுதலாக ஒரு அந்தருக்கு ஐந்து சதம் கையாடும் செலவாக அறவிடப்படும்.

இப்பகுதியுடன் ரூபா 100 தங்குபணமாகக் கொடுத்து அப்பற்றுச் சீட்டுடன் கோரிக்கை செய்யப்பட வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கோரிக்கைக்காரர் கோரிக்கை ஏற்றுக்கொண்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்கட்குள் பணத்தைக் கொடுத்துப் பொருளை எடுத்துச் செல்லத் தவறின் தங்குபணமாகக் கொடுக்கப்பட்ட தொகை பறிமுதல் செய்யப்படும்.

கோரிக்கை பதிவுசெய்யப்பட்ட கடிதமூலம் உணவு அதிகாரி, 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்னும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது இப்பகுதியில் உள்ள கோரிக்கைப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கோரிக்கை அனுப்பும் மேலுறையின் இடதுபக்க மூலையில் "மாசிக்கருவாடுத் துண்டுகளுக்கான கோரிக்கை" என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

கே. ஆழ்வாப்பிள்ளை,
பதில் உணவு அதிகாரி.

1960 ம் ஆம் மே மீ 20 ந உ.

## கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை

### 3 ம் நம்பர் தேனீர்ச்சாலே—இராணி எலிசபெத் துறை மேடை

இராணி எலிசெபெத் துறை மேடைக்குக் கிட்டவாகவுள்ள 3 ம் நம்பர் தேனீர்ச்சாலேயைக் குத்தகைக்குக் கொடுக்க முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். குத்தகை, கப்பற்றுறை ஆணையாளரால் குறிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்காகும்.

2. கொழும்பு கப்பற்றுறை ஆணையாளர் களரியில் ரூபா 25 கட்டுப் பணமாகக் கட்டி அவ்விடமிருந்து பெறப்படும் பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, இணைப்பத்திரத்துடன் அனுப்பப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள், 1960 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி நண்பகல் 12 மணிவரை களரி வேலை நேரங்களில் வழங்கப்படும்.

4. குத்தகைக்கான நிபந்தனைகள் கேள்விப் பத்திரங்களுடன் சேர்த்துக்கொடுக்கப்படும்.

எம். எல். டி. கஸ்பேர்ஸ்,
பதில் கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை அதிகாரசபை,
கொழும்பு, 1960 ம் ஆண்டு மே மாதம் 13 ந் திகதி.

## விளம்பரம்

1960 ம் ஆண்டு ஆனி (ஜூன்) மாதம் 8 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1960 ம் ஆண்டு ஆனி (ஜூன்) மாதம் 10 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1960 ம் ஆண்டு ஆனி (ஜூன்) மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென்று இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1960 ம் ஆம் வைகாசி (மே) மீ 19 ந உ.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.